## இணைகரம் - சுற்றளவு மற்றும் பரப்பளவு - பயிற்சி - தநாஅபு - பயிற்சி 2.1.3-4

3. சுரேஷ் என்பவர் மாநில அளவிலான சதுரங்கப் போட்டியில் இணைகர வடிவிலான கோப்பை ஒன்றை வென்றார். அக்கோப்பையின் பரப்பளவு 735 ச.செ.மீ மற்றும் அடிப்பக்கம் 21 செ.மீ எனில், உயரம் காண்க.




சுரேஷ் வென்ற கோப்பையின் வடிவமானது இணைகரம்

இணைகரத்தின் பரப்பளவு காணும் சூத்திரம் $= b \times h$ (அடிப்பக்கம் ($b$) $\times$ உயரம் ($h$))

$735 = 21 \times h$

$21 \times h = 735$


$h = \frac{\cancel{735}^{35}}{\cancel{21}_{1}} = 35$

$$\begin{array}{r} 35 \\ 21\,)\overline{735} \\ 63 \\ \hline 105 \\ 105 \\ \hline 0 \end{array}$$

இணைகர வடிவிலான கோப்பையின் உயரம் = 35 செ.மீ

4. ஜானகி என்பவரிடம் உள்ள ஓர் இணைகர வடிவிலான துணியின் உயரமும் நீளமும் முறையே, 12 செ.மீ மற்றும் 18 செ.மீ. மேலும் அதை நான்கு சமமான இணைகரங்களாக்கிப் பிரித்துப் (இணைப்பக்கங்களின் மையப்புள்ளி வழியாக) புதிய இணைகரத்தின் பரப்பளவு காண்க.

**இணைகரத்தின் பரப்பளவு காணும் சூத்திரம்** $= b \times h$ ச.செ.மீ




இணைகரம் வடிவிலான துணியை அதன் இணைப்பக்கங்களின் வழியாக பிரிக்கையில் நான்கு சமமான பாகங்களாக நமக்கு கிடைக்கும்

**அடிப்பக்கம் காணுதல் ($b$)**

பிரிக்கப்பட்ட இணைகரத்தின் அடிப்பக்கங்களின் நீளம் $= \frac{\cancel{18}^{9}}{\cancel{2}_{1}} = 9$

அடிப்பக்கம் = 9 செ.மீ

**உயரம் காணுதல் ($h$)**

பிரிக்கப்பட்ட இணைகரத்தின் உயரம் $= \frac{\cancel{12}^{6}}{\cancel{2}_{1}} = 6$

உயரம் = 6 செ.மீ

**புதிய இணைகரத்தின் பரப்பளவு காணுதல் ($Area$)**

**இணைகரத்தின் பரப்பளவு காணும் சூத்திரம்** = அடிப்பக்கம் ($b$) $\times$ உயரம் ($h$)

$= 9 \times 6 = 54$

பரப்பளவு = 54 ச.செ.மீ

நான்கு புதிய இணைகரங்களின் பரப்பளவு = 54 ச.செ.மீ


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 19th July, 2022 :: 17:50 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**